

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 22.09.2025 அன்று பாளையங்கோட்டை,களக்காடு நாங்குநேரி,வள்ளியூர்,சேரன்மகாதேவி இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூபாய்.605 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்றார். மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார் தலைமையில் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.



அருப்புக்கோட்டையில் நடந்த தனியார் வேலை வாய்ப்பு முகாமில் பணி நியமன ஆணையை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் வழங்கினார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், சிவப்பிரகாசம், நகர செயலாளர் ஏ கே மணி, நகர் மன்ற துணை தலைவர் பழனிச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேசன், பொன்ராஜ், ஆகியோர்கள் உடன் இருந்தனர்.



ராமநாதபுரத்தில் நடைபெற்ற தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் சே.மெ. மதிவதினி கலந்துகொண்டு பேசினர். இக்கூட்டத்தில், பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் முருகேசன், முன்னாள் அமைச்சர்கள் சந்தியமூர்த்தி,சுந்தராஜன்,மாநில இளைஞரணி துணைச்செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, முன்னாள் மாவட்ட செயலாளர் சுப தா திவாகரன், மாவட்ட துணைச் செயலாளர் கருப்பையா, நகர் மன்ற தலைவர் கார்மேகம், மிசா அகமது தம்பி, துணைத்தலைவர் பிரவீன் தங்கம், மற்றும் மாநில,மாவட்ட,நகர,ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.



விளாத்திகுளம் வட்டம், சிவஞானபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் கலையரங்கம் மற்றும் சுகாதார வளாகம் கட்டுவதற்கும் பள்ளி கட்டிடங்களை புதுப்பிப்பதற்கும் பள்ளி மாணவ – மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை வைத்தது தொடர்ந்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜன், சின்னமாரிமுத்து, இமானுவேல், மாவட்ட பிரதிநிதி ஆதிசங்கர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆகாஷ்பாண்டியன், உட்பட பொதுமக்கள் உடன் இருந்தனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கழக தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் காரைக் குடி மாநகர கழகத்தின் சார்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுதிமொழி ஏற்பு மாநகர செயலாளர் நா.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மேயர் எஸ். முத்துதுரை, மாநகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், தலைமையில் மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஒத்தக்கடை ஊராட்சி சீதாலட்சுமி நகரில் புதிய நியாய விலைக் கடையினை திறந்து வைத்து பார்வையிட்டார். A2401 ஒத்தக்கடை கூட்டுறவு நகர கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஒத்தக்கடை முழுநேர நியாய விலைக் கடையில் 1703 குடும்ப அட்டைதாரர்கள் உணவு பொருட்கள் பெற்று வந்தனர். இதில், சீதாலட்சுமி நகர் பகுதியில் உள்ள 400 குடும்ப அட்டைகளுக்கு பொருட்கள் விநியோகம் செய்யும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூபாய் 13.56 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலை கடை திறக்கப்பட்டுள்ளது உடன் கழக நிர்வாகிகள் அ. பா. ரகுபதி, வடிவேல் முருகன், வக்கீல் கலாநிதி, ஒத்தக்கடை சரவணன், பாலாண்டி, அண்ணாமலை மற்றும் தள்ளான கழக நிர்வாகிகள் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் அருப்புக்கோட்டை மேலரதவீதியில் பொதுக்குழு உறுப்பினர் சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரை கே.கே.எஸ்.எஸ்.ஆர். ஆர்.ரமேஷ் வழங்கினார். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், ஊடகவியலாளர் செந்தில்வேல், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மாரியப்பன் கென்னடி ஆகியோர்கள் கலந்து கொண்டு பேசினர். உடன் இராஜபாளையம் சட்ட மன்ற தொகுதி தங்கப்பாண்டியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தனுஷ் எம்.குமார், மாநில ஆதிதிராவிட நலக்குழு துணைச் செயலாளர் வி.பி.ராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், குன்னூர் சீனிவாசன், மாவட்ட துணைச் செயலாளர் இராசா அருண்மொழி, மாநில நெசவாளர் அணி பழனிச்சாமி, மாவட்ட அவைத் தலைவர் செல்வமணி, மாவட்ட துணைச் செயலாளர் RKV.துரை, மாவட்ட துணைச் செயலாளர் நிர்மலா கடற்கரை ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுப்புராஜ், சாகுல் ஹமீது, மாவட்ட கழக பொருளாளர் பிராபாகரன், பொதுக் குழு உறுப்பினர்கள் கொப்பையாராஜ், பவித்ரா ஷியாம், இராஜேஸ்வரி புகழேந்தி, அசோக், சிவக்குமார், கனகராஜ், சிங்கராஜ், இளைஞர் அணி பாபு, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேசன், பொன்ராஜ், கனிமுருகன், முருகேசன், கடற்கரைராஜ், மல்லி ஆறுமுகம், ஞான ராஜ், சரவண முருகன், ஜெயபாண்டியன், கிருஷ்ண குமார், முனியாண்டி, நகர செயலாளர்கள் குருசாமி, அய்யாவுபாண்டியன், ராமமூர்த்தி, மணிகண்ட ராஜா, பேரூர் செயலாளர்கள் உதயசூரியன், சிந்து முருகன், கருணை ஈஸ்வரன், சாந்தாராம், சிட்டி பாபு, இளங்கோவன், சிங்கம்புலி அண்ணாவி ஆகியோர் கலந்து கொண்டனர். நன்றியுரை நகரச் செயலாளர் ஏ.கே.மணி கூறினார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், தலைமையில் ஊமச்சிகுளம் சந்திப்பில் தூய்மை இயக்கம் 2.0 திட்டம் சார்பில் மாபெரும் கழிவு சேகரிப்பு இயக்கத்தின் கீழ் மாபெரும் தூய்மை செய்யும் பணியினை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் செட்டிகுளம் ஊராட்சி, ஊமச்சிகுளம் முதல் கடச்சனேந்தல் வரை சுமார் 2.5 கி. மீ நீளத்திற்கு தூய்மை செய்யும் பணியில் 400க்கும் மேற்பட்ட தூய்மை காவலர்கள், பொதுமக்கள், தன்னார்வலர்கள் பங்கேற்றனர். கழக நிர்வாகிகள் சிறைச்செல்வன், ஆசை கண்ணன், வீரராகவன், கௌரி சங்கர் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்,இளம்புவனம் ஊராட்சி,பிதப்புரம் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் ஒன்றிய பொது நிதியின் கீழ் ரூ.16.45லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வு குழுத் தலைவர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதக்கண்ணன், விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல் வடக்கு மாவட்ட மாணவர் அணி, துணை அமைப்பாளர் ஆகாஷ்பாண்டியன், ஒன்றிய துணைச் செயலாளர் வெள்ளத்துரை, கிளைச் செயலாளர்கள் நாகராஜ்,மாடசாமி, சுரேஷ் எட்டயபுரம் பேரூர் கழகத் துணைச் செயலாளர் மாரியப்பன், மகளிர் அணி அமுதா உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.